பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: புரட்டாசி 26 (12—10—71) செவ்வாய் வெளியூர்: புரட்டாசி 27 (13—10—71) புதன் [இதழ்: 99

மதுவிலக்கை ரத்து செய்க--

இந்திரா காங்கிரசு தீர்மானம்

பூனு அக். 12—

மதுவிலக்கை அடியோடு ரத்து செய்யுமாறு மாராட்டிர மாநில அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் -- பூனு நகர இந்திரா காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் -- அபரிமிதமான 'மெஜாரிட்டி'யுடன் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டு வாக்காளர்கள் தெளிவற்றவரா?

கட்சித் தொண்டர்களிடையே காமராசர் சண்டப்பிரசண்டம்!

சேலத்தில் கூடிக் கலைந்த தமிழ்நாடு சிண்டிகேட் கட்சியின் பேரவைக் கூட்டத்தில் பேசிய உயர்திருவாளர் காமராசர், தமிழ்நாட்டு அரசியல் முதல் அகில இந்திய அரசியல் வரை 'அலசு -- அலசு' என அலசியிருக்கிறார்; 'ஆளுங்கட்சியினரை வெளுத்துக் கட்டிவிட்டார் நமது தலைவர்' என்று சிண்டிகேட் கட்சித் தொண்டர்கள் 'ஆத்ம திருப்தி' அடைந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

திருவாளர் காமராசர், தமிழ்நாட்டு அரசையும் -- ஆளுங் கட்சியையும் குறை கூறிப் பேசியதற்காக நாம் வருத்தமோ -- ஆத்திரமோ அடையவில்லை. எதிர்க் கட்சி ஒன்றின் தலைவர் என்ற முறையில், ஆட்சியில் உள்ள குறைபாடுகளைக் கண்டிக்க அவருக்கு நிரம்ப உரிமையுண்டு. நெடுநாள் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு, அவர் பேச ஆரம்பித்திருப்பதை நாம் வரவேற்கிறோம்; அவர் கழக அரசைத் தாக்குவதில் ஒன்றும் புதுமையோ -- வியப்போ இல்லை; கழகத்தையோ -- கழக அரசையோ அவர் தாக்காமல் இருந்தால்தான் அதிசயமாகும்.

'நீண்ட நாளைக்குப் பிறகு பேசியிருக்கிறாரே -- ஏதாவது புதிய கருத்துக்களை உதிர்த்திருக்கிறாரா' என்று துருவித் துருவிப் பத்திரிகைகளைப் படித்துப் பார்த்தோம்; மொத்தத்தில் கூட்டிக் கழித்துப் பார்த்தால், 'கழக அரசைக் கடுமையாகத் தாக்கினார்' என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

• 'தி. மு. கழக அரசுக்குத் திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கை இல்லை' என்பதும், 'வரிச் சுமை அதிகரித்து விட்டது' என்பதும், 'வரிப் பணத்தை வீண் செலவு செய்கிறது அரசு' என்பதும், 'ஊழல்கள் மலிந்துவிட்டன' என்பதும் அவருடைய வழக்கமான பல்லவிதான்! இந்தக் கூற்றுக்களுக்கெல்லாம் நாம் எத்தனையோமுறை பதில் சொல்லிவிட்டோம்; தமிழ்நாட்டு மக்களும் அவருக்குத் தக்கமுறையில் பதிலளித்துவிட்டார்கள்; இன்னமும் அவர் பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது!

'ஊழல் -- ஊழல்' என்று ஊர் ஊராகக் காமராசரும் -- அவர் திருக்கூட்டமும் நாள் தவறாமல் ஓலமிட்ட பிறகுதான், 138 இடங்களாக இருந்ததை 184 இடங்களாகச் சட்டமன்றத்தில் தி. மு. கழகத்துக்குப் பெருக்கித் தந்திருக்கின்றனர் -- தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள். ஐம்பது இடங்களை வைத்திருந்த சிண்டிகேட்டர்கட்கு, '15 இடங்களே போதும்' என்று நிறுத்திக் கொண்டனர்.

நல்ல அரசியல் தெளிவு பெற்ற தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்களை, இப்படிப்பட்ட வெற்றுக் கூச்சல்களால் ஏமாற்றிவிட முடியாது என்பது, கடந்த பொதுத் தேர்தலிலேயே உறுதிப்பட்டு விட்டது.

சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திருவாளர் கருத்திருமன், தமது பதவிக் காலத்தில் அரசின்மீது சுமத்திய ஒரு குற்றச்சாட்டைக்கூட ஆதாரங்களுடன் மெய்ப்பிக்க முடியவில்லை. சட்டமன்றத்துக்குள் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளை எழுப்பிவிட்டு அதை நிரூபிக்க முடியாமல் விழிப்பது -- வெளியில் போய், 'சண்டப் பிரசண்டமடிப்பது' -- இத்தியாதி காரியங்களில் பேர்போன கருத்திருமன், கடந்த தேர்தலுக்குப் பின் இருக்குமிடமே தெரியாமல் போய்விட்டார்!

தேர்தலுக்குமுன் சிண்டிகேட்டர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகளும் -- அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களும் நியாயமானவையாக இருந்திருக்குமானால், தி. மு. கழகத்துக்கு ஒரு இடமாவது கிடைத்திருக்குமா?

அரசியலில் 'அபங்கலி'யாக்கப்பட்டுவிட்ட காமராசரும் -- அவர்தம் கூட்டத்தாரும் ஆயாசப்பட்டுப் பயன் என்ன? இனி, அவர்கட்கு எதிர்காலம் இல்லை என்பது கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் உறுதியாக முடிவு செய்யப்பட்டுவிட்டது! அவர்கள் இனி அரசியலில் எந்த வேடம் பூண்டுவந்தாலும் ஏமாறுவதற்குத் தமிழ்நாட்டில் ஆள் இல்லை!

இந்த நிலையில் காமராசர் சொல்லுகிறார் -- வாக்காளர்கட்கு நல்ல அரசியல் தெளிவூட்டும் வேலையில் தம கட்சித் தொண்டர்கள் ஈடுபட வேண்டும்' என்று! ஆச்சரியமாகத்தான் இருக்கிறது! யாருக்கு யார் அரசியல் தெளிவூட்டுவது?

இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டு வாக்காளர்கள்தாம் நல்ல தெளிவோடு தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள் என்பது உலகமே ஒப்புக்கொண்டிருக்கும் உண்மை!

முன்பு 1967 தேர்தலில், 'மக்கள் மயங்கித் தி. மு. கழகத்துக்கு வாக்கு அளித்துவிட்டனர்' எனக் கூறினார்; இப்போது, போதிய அரசியல் அறிவுத் தெளிவு ஏற்படாததனாலேயே 'ஊழல்கள் புரிந்து வரும் தி. மு. கழக அரசை மீண்டும் தேர்ந்தெடுத்துவிட்டதாக'க் கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட பேச்சுக்களால்தான், இருந்த செல்வாக்கையும் காமராசரின் கட்சி இழக்க நேரிட்டது!

காமராசர் இப்படிப் பேசப் பேச நமக்கு இலாபம்தான்! தாராளமாகப் பேசட்டும் -- நாளுக்கு ஒரு கூட்டம், ஊருக்கு ஒரு கூட்டம் போட்டுப் பேசட்டும்! அவருக்கு உரிய பதில் அடுத்துவரும் தேர்தலில் கிடைக்கும்!

ரங்பூர் பகுதி விடுதலை

வங்க தேச அரசு அறிவிப்பு

முஜிபூர் நகர், அக். 12—

வங்க தேசத்தில் இரங்பூர் பகுதி விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக வங்க தேசத் தலைமையமைச்சர் தாசுதின் அகமது அறிவித்தார்.

இப்பகுதி முழுக்க முழுக்க விடுதலைப் படையின் ஆதிக்கத்தில் இருப்பதாகவும், அங்கு சிவில் நிர்வாகம் நிறுவப்பட்டு வரிகள் வசூலிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானுக்கு ஜப்பான் கப்பல்கள்

வங்க தேசத்துக்குப் படைகளை ஏற்றிச் செல்வதற்காம்

டோக்கியோ, அக். 12—

வங்க தேசத்துக்குப் படைகளை ஏற்றிச் செல்லுவதற்காக 5 கப்பல்களை ஜப்பானிடமிருந்து பாகிஸ்தான் பெற்றிருக்கிறது.

ஏற்கனவே படைகளை ஏற்றிச் செல்லுவதற்காக இருந்துவரும் 3 கப்பல்களுடன் இவையும் சேர்த்துக்கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது.

பிரான்சு -- சீனு குலாவல்!

பிரான்சுக்கும்--சீனுவுக்கும் இடையிலான உறவு நெருங்கிவருவதாகத் தெரியவருகிறது.

சீன அமைச்சர் ஒருவர் முதல் தடவையாக பிரான்சுக்கு வருகை தந்து 12 நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டிருக்கிறார்.

பம்பாயில் 59 ஆலைகள் பாதிப்பு

பம்பாய், அக். 12—

குறைந்தபட்ச போனசு 8.33 சதவிகிதம் தர வேண்டுமென்று ராகாரி வேலைநிறுத்தம் நடைபெற்று வருவதால், பம்பாயில் 59 ஆலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வேலைநிறுத்தத்தில், மொத்தமுள்ள 2,00,000 தொழிலாளர்களில் 65 சதவிகிதத்தினர் ஈடுபட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

முஜிபுர் ரகிமானின் எதிர்காலம்

அதிபர் யாகியா கான் நிர்ணயிக்கிறார்

முக்கிய அறிவிப்பு இன்று வெளியாகிறது

புதுடில்லி, அக் 12—

பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் முக்கியமான அறிவிப்பு ஒன்றை இன்று வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு முஜிபுர் ரகிமானின் எதிர்காலம் குறித்ததாக இருக்கக்கூடும் என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.

ரகிமான்மீது நடத்தப்பட்ட இராணுவ விசாரணையின் முடிவை யாகியா கான் அறிவிக்கக்கூடும் என்றும், இந்தத் தீர்ப்பு அநேகமாக மரண தண்டனையாக இருக்கலாம் என்றும், ஆயினும், ஏற்கனவே யாகியா கான் அறிவித்திருந்த மன்னிப்பு அளிக்கும் முறைப்படி இந்தத் தண்டனை ரத்து செய்யப்படலாம் என்றும் நம்பப்படுகிறது.

உயர்மட்டத்தில் உள்ளவர்கள் நடத்தும் கேலிக்கூத்து

அ. இ. இரயில்வே தொழிற்சங்கம் இடித்துரை

அனுமந்தையா -- கங்குலி விவகாரத்தில் இந்திரா காந்தி தலையிடுவாரா?

புதுடில்லி, அக. 12—

இரயில்வே போர்டு தலைவர் கங்குலியால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் புதிய சிக்கலைத் தீர்ப்பது குறித்து மத்திய அரசு, உயர் மட்ட அளவில் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

பிரச்சினையைத் தீர்க்க இரண்டு வழிகளே உள்ளன என்று கூறப்படுகிறது; ஒன்று--கங்குலி பதவி விலகுவதற்கு முன்னோடியாக மூன்று மாத விடுமுறையில் செல்லுவது கங்குலியை வேலையைவிட்டு நீக்குவது.

ஏற்பட்டிருக்கும் நிலைமை குறித்து இரயில்வே அமைச்சர் அனுமந்தையா தலைமையமைச்சருடன் விவாதித்தார். இரயில்வே போர்டின் ஏனைய உறுப்பினர்களுடனும் அவர் விவாதம் நடத்தினார்.

கங்குலி அடுத்த சனவரி 15-ம் நாள் பதவி விலகவிருக்கிறார்; ஆகவே, அதற்கு மூன்று மாதத்துக்கு முன்னாலேயே அவர் விடுமுறையில் செல்லலாம்.

அரசாங்கமே அவரை வேலையிலிருந்து நீக்க விரும்பினால், அதற்குக் குடியரசுத் தலைவரின் தனி அனுமதியைப் பெற்றாக வேண்டும்; மற்றபடி, விளக்கம் கேட்டு நோட்டீசு தருவதோ, 'சஸ்பெண்டு' செய்வதோ நீதிமன்றம்வரை செல்வதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடியதாகும் என்று கருதப்படுகிறது.

தமது பெட்டியை நிறுத்தி வைத்ததற்கான சரியான காரணத்தைக் கூறாததால், கங்குலி இன்னமும் அப்பெட்டியிலேயே இருந்து வருகிறார்.

மேற்குப் பகுதி இரயில்வேத் தொழிலாளர் சங்கத் தலைவர் குமாரி மணிபென்காரா, இப்பிரச்சினையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அனைத்திந்திய இரயில்வே ஊழியர் சங்கத் தலைவர் பீட்டர் ஆல்வாரிஸ், தலைமையமைச்சர் தலையிட்டுச் சிக்கலைத் தீர்க்குமாறு கேட்டுக்கொண்டார்; இல்லையென்றால், இரயில்வே அமைச்சரும்--போர்டும் நாட்டின் நகைப்புக்கு இலக்காகிவிடக்கூடும் என்றும் அவர் கூறினார்.

தமிழ்நாடு நிலவுடைமை உச்சவரம்புச் சட்டம் செல்லும்

: தலைமை நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, அக். 12—

1961-ம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலவுடைமை உச்சவரப்பு)'ச் சட்டம் செல்லும் என்று தலைமை நீதிபதி சிக்ரி தலைமையில் 7 நீதிபதிகள் கொண்ட தலைமை நீதிமன்றத்தின் தனிப் பெஞ்சு தீர்ப்பளித்தது.

அச்சட்டத்தின்படி, ஒரு குடும்பத்துக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் விவசாய நிலம் உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டது.

'சட்டம் செல்லும்' என்று சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து ஜெகன்னாதன் மற்றும் சிலர் தாக்கல் செய்த அப்பீல்களைத் தலைமை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் ---

11 -- 10 -- 71 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற 36-வது குலுக்கலில் அளிக்கப்பட்ட பரிசுகள் விவரம் :--

சிறப்புப் பரிசுகள்:

முதல் பரிசு: ரூ. 10,00,000 — 'ஐ.ஜி.' வரிசை : 900823

★ இரண்டாவது பரிசு : ரூ. 2,00,000 — 'ஐ.எச்.' வரிசை : 145428

★ மூன்ருவது பரிசு: ரூ. 1,00,000 — 'ஐ ஐ.' வரிசை : 692199

ஒவ்வொரு தொடரிலும் சாதாரணப் பரிசு பெற்ற எண்கள் வருமாறு :---

'ஐ. சி.' வரிசை

5 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ.10,000 விதம்
037358 108362 370917 820167
840275

10 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
025951 039060 251126 266230
268415 324394 493309 575985
857957 898975

50 ஆருவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
024431 030675 048198 072534
076516 081947 086654 086668
092679 098489 101084 151847
166395 185722 208395 211989
241274 243376 250781 298662
319210 319541 428713 429476
443258 447115 453778 472445
562377 589201 589601 611783
629619 639156 642863 657473
681484 716885 740762 758302
768755 787340 800579 872968
884782 905410 946722 952342
964003 964633

1000 ஏழாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—
0433 0964 1563 1996 [illegible]
6392 8962 9112 9906 9987

'ஐ. டி.' வரிசை

5 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
167694 235064 254994 555589
732907

10 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
050612 062614 111380 324283
351947 499029 584742 644998
701581 713705

50 ஆருவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
015380 055378 072258 078216
087605 142502 153188 158006
167519 169756 266734 271053
272790 287073 288172 325179
333424 364191 372605 378079
378309 444019 475013 495481
500481 501201 530421 575218
592686 653286 661704 662872
665764 686767 760485 769934
788810 791490 794554 807371
811959 843754 844305 856091
856702 866100 868479 874209
912509 952426

1000 ஏழாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—
1272 1297 1505 4963 5078
6501 7249 7396 7469 9742

'ஐ. இ.' வரிசை

5 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10 000 விதம்
047143 056831 116994 760825
961230

10 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
205363 304737 403391 412742
535082 648293 650986 804088
825856 914492

50 ஆருவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
002209 029200 062015 078711
085298 091592 104206 125071
133154 168944 169059 172786
240072 277062 333991 355281
379853 389494 428199 483281
546614 562352 571500 579662
582990 597350 602096 607552
612928 616093 647892 673662
711269 725382 732009 735535
761186 768297 775591 779213
844972 853464 862665 869381
880638 914865 916276 918012
924298 988054

1,000 ஏழாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—
0220 2210 2913 3098 5031
6233 7081 7782 8097 9672

'ஐ. எப்.' வரிசை

5 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
262296 348732 408738 562165
850502

10 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5.000 விதம்
058682 079151 166322 504234
539034 550317 802782 856241
883339 962283

50 ஆருவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
001881 002033 028041 036775
069393 093332 178085 257838
258129 265965 282408 284673
334926 387070 387457 388464
389983 391054 394268 411651
443553 464066 468274 482983
490968 492851 504770 522426
578048 590370 658631 660470
679025 715022 715298 757730
761018 804544 812210 814371
825520 842173 861311 866692
879884 902260 933869 954089
956290 957031

1000 ஏழாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—
0321 1691 2327 2691 2709
6279 6773 7612 9855 9944

'ஐ. ஜி.' வரிசை

5 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10 000 விதம்
139999 521363 700168 730038
907931

10 ஐந்தாவது பரிசுகள் —
ஒவ்வொன்றும் ரூ. 5 000 விதம்
041090 197032 276381 369660
478198 767776 773098 779291
869479 970984

50 ஆருவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
010464 020763 030235 034882
035633 067634 092429 117545
135182 165748 170550 257750
273402 279044 300971 328314
384966 452304 462862 489197
516299 525098 548769 556217
557039 561964 569239 599463
604849 623330 626238 667290
669312 700138 701551 746189
780441 794630 801719 826437
850204 855351 859106 867006
947661 953770 965133 970622
983381 994329

1,000 ஏழாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—
1089 1566 2337 3166 4851
7238 7574 7734 9310 9920

'ஐ. எச்.' வரிசை

5 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
531988 654574 722755 800190
933629

10 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
258855 265276 502283 555458
544013 546357 725974 791941
841170 988837

50 ஆருவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
015119 016793 032828 033365
070841 072816 085498 085938
096070 110575 151795 159235
170321 222020 238390 241543
260191 263099 285165 301493
409200 465561 500434 505152
530236 587674 607778 628253
643209 645417 654124 674175
706835 710359 717733 756159
759383 776232 783967 805210
820013 830798 859358 866096
909429 932299 932417 933230
963992 986470

1,000 ஏழாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—
0229 0318 1235 5200 5399
6495 7149 8383 8610 9178

'ஐ. ஐ.' வரிசை

5 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
128985 341438 531801 840021
963763

10 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
104845 470295 723596 760396
815062 832513 841188 873499
889173 949029

50 ஆருவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
018568 022849 029908 066472
131781 148328 152236 173439
175808 209480 225894 248237
296091 310431 384031 405552
409094 436062 443455 464271
520735 531192 532063 537761
550588 552019 558425 607812
655094 683397 698032 720554
722679 725503 731724 743577
749491 776830 802632 824217
835212 840986 887302 925351
928144 929331 931395 931568
966928 982262

1,000 ஏழாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—
0813 1521 4379 4587 4899
6273 6499 7224 9801 9831

'ஐ. ஜே.' வரிசை

5 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்
084517 090891 154512 275130
825704

10 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்
200272 274601 567317 651334
732962 735242 894268 908283
961682 996289

50 ஆருவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்
025388 028722 052911 059390
086130 097719 125812 154248
182757 254795 276865 281920
283906 333800 410233 440708
470188 474025 474203 542696
543924 553966 562115 564531
608622 612305 622668 629259
661254 662412 702552 709244
722342 750492 764472 819009
821067 829896 842531 883834
900690 904430 928795 930763
949690 953909 977735 985619
990441 993243

1,000 ஏழாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்
00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும் :—
0023 0270 1334 1531 1913
3285 3431 4935 9355 9839

சிறப்புப் பரிசுகள் 1-முதல் 3-வரையிலும், வழக்கமான 4-வது பரிசு பெற்ற சீட்டுக்களையும் வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெற சென்னை அரசினர் எஸ்டேட்டில் உள்ள தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலும், 5-வது பரிசு முதல் 7-வது பரிசு வரை பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெறத் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு துணைக் கருவூலத்திலும் அதற்குரிய படிவங்களை நிரப்பிக் கொடுத்துப் பரிசுகளைப் பெறலாம் ; எழுதித் தரவேண்டிய படிவங்கள், பரிசுகள் பெற வேண்டிய அலுவலகங்களில் கிடைக்கும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது ரிசர்வ் பாங்கு அட்டவணையிலுள்ள பாங்குகள் மூலமாகவோ கோரக்கலாம்.

பரிசுச் சீட்டுப் பற்றி விவரங்கள் ஏதும் தேவைப்பட்டால், 'இயக்குநர் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2' என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.

விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசி தேதி: 7 -- 11 -- 1971

அநேகரின் வேண்டுகோளின்படி 12–10–1971 முதல் தமிழகப் பரிசுச் சீட்டுத் திட்டத்தில் 37-வது குலுக்கல் முதல் கீழ்க்கண்ட புதிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது :—

மேற்படி புதிய மாற்றத்தில் பரிசுகள் விவரம் :

ஒவ்வொரு வரிசைக்கும்		மொத்தமான தொகை
1. முதல் பரிசு ரூ. 1 இலட்சம் விதம் -- ஒன்று	...	100 000
2. இரண்டாவது பரிசுகள் ரூ. 10 000 விதம் -- 5	...	50 000
3. மூன்ருவது பரிசுகள் ரூ. 5,000 விதம் -- 10	...	50 000
4. நான்காவது பரிசுகள் ரூ. 1,000 விதம் -- 50	...	50 000
5. ஐந்தாவது பரிசுகள் ரூ. 100 விதம் -- 1000	...	100 000
ஒவ்வோரு வரிசைக்கும் மொத்தப் பரிசுகள் : 1066	...	3,50,000

மொத்தப் பரிசுகள்: 2,132
மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 7,00,000

அடுத்த குலுக்கல் தேதி : 31--10--1971

அடுத்த குலுக்கலுக்குத் தொடர்கள் 2 (இரண்டு) : ... 'ஐ.கே.', 'ஐ.எல்'

சேலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

இதுவரை 256 இலட்சாதிபதிகளைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது.

உங்கள் பணம் உங்களுக்கும் நாட்டிற்கும் உதவுகிறது.

ஒரு பரிசுச் சீட்டின் விலை ரூ. 1-தான்!

தே. அரங்கநாதன், இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

காச நோய் ஒழிப்பில் தமிழகம் காட்டும் ஆர்வம்

முத்திரை விற்பனையில் முன்னணியில் திகழ்கிறது

அமைச்சர் க. அன்பழகன் பெருமிதம் -- அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகோள்

சென்னை, அக். 12 —
"தமிழகத்தில் 6 இலட்சம்பேர் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் ; இந்நோயைத் தடுப்பதில் மக்கள் கவனம் செலுத்தவேண்டும்"
என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கூறினர்.

22-வது காச நோய்த் தடுப்பு முத்திரை விற்பனை விழா நேரு விளையாட்டு அரங்கத்தில், மேயர் சா. கணேசன் தலைமையில் நடைபெற்றது.

காச நோய்த் தடுப்பு முத்திரை விற்பனையைத் துவக்கிவைத்துப் பேசுகையில் பேராசிரியர் க. அன்பழகன் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"காச நோய் முத்திரை விற்பனையில் கடந்த மூன்று -- நான்கு ஆண்டுகளாகத் தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது ; முத்திரை விற்பனைமூலம் கிடைக்கின்ற பணம் ஓர் அளவுக்கு உட்பட்டதுதான் என்ருலும், காச நோய்த் தடுப்பில் மக்களுக்கு நல்ல விழிப்பு ஏற்படச் செய்கிறது.

தமிழகத்தில் நூற்றுக்கு 2 பேருக்குக் காச நோய் ஏற்பட்டுள்ளதாகக் கணக்கு எடுக்கப்பட்டுள்ளது.

காச நோய்த் தடுப்புக்குத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டுவருகிறது ; இதில் மக்களும் ஆர்வம் காட்டவேண்டும்.

காச நோய்க்குச் சிகிச்சையளிக்கத் தமிழகத்தில் மூன்று 'சானிடோரி'யங்கள் இருக்கின்றன ; தற்போது நவீன மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் இந்த நோய்க்கு வீட்டிலேயே சிகிச்சையளிக்க இயலும் ; எனவே, புதிதாகத் தமிழகத்தில் 'சானிடோரி'யங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை."

நடிகை விசயகுமாரி, மாடி இலட்சுமி ஆகியோருக்கு அமைச்சர், முதலில் காச நோய் முத்திரையை விற்பனை செய்தார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மேயர் சா. கணேசன் பேசுகையில், 'சென்னை புளியந்தோப்பிலுள்ள காச நோய் மருத்துவமனையில் ஒழுங்காகச் சிகிச்சைப் பெறுகிறவர்களுக்கு மாதம் ரூ 10 உதவிப் பணம் வழங்கப்பட்டுவருகிறது ; காச நோய் முத்திரை விற்பனைமூலம் ஆண்டுக்கு இலட்சம் ரூபாய் திரட்டுவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார்.

• சென்னை நகரக் காச நோய், சங்க மத்தியக் குழுச் செயலாளர் டாக்டர் வி. எஸ். செல்வபதி துவக்கத்தில், அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'சென்னை நகரில் மட்டும் 10,000 பேர் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்ருர்.

"காச நோய் முத்திரை விற்பனையை அதிகரிக்கத் திரைப்படக் கொட்டகைகளில் டிக்கெட்டுகளுடன் 10 காசு காச நோய் முத்திரையையும் சேர்த்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மாநகராட்சி ஆணையர் ஜே. வி. எஸ். ராவ் நன்றி கூறினர்.

தனியார் கல்லூரி ஊழியர்கட்கும் வீட்டு வாடகைப் படி

சென்னை, அக். 12—
"இப்போது தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்கட்கு வீட்டு வாடகை அலவன்சு அளிக்கப்படுகிறது ; அக்டோபர் மாதத்திலிருந்து அக்கல்லூரிகளில் உள்ள ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் இந்த அலவன்சு கொடுக்கப்படும்"
என்று கல்வியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

இச்சலுகை வழங்குவதால், தனியார் கல்லூரிகளின் நிறுவனர்களுக்கு ஆகும் செலவில் பாதியை அரசு ஏற்றுக்கொள்ளும்.

நவம்பர் மாதம் முதல் தேதியன்று வழங்கப்படும் சம்பளத்துடன் வீட்டு வாடகைச் சலுகையையும் பெறத் தனியார் கல்லூரி ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் உரிமை பெறுவார்கள்.

ஏட்டுச் சுவடிக்குள் புதைந்துள்ள அரிய மருத்துவ நுணுக்கம்

வெளிப்படுத்த அமைச்சர் அன்பழகன் வலியுறுத்தல்

நெய்வேலி, அக். 11—
"சித்த மருத்துவ முறையை விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்வதற்கு அரசு எல்லா உதவியும் அளிக்கும்"
என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. க. அன்பழகன் அவர்கள் உறுதியளித்தார்.

பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் -- ஊழியர்கள் கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர், பழைய ஏட்டுச் சுவடிகளில் புதைந்துள்ள மருத்துவ நுணுக்கங்களைக் கண்டறிந்து அவற்றைப் புத்தகமாக வெளியிடுமாறு வலியுறுத்தினர்.

அரிசி அரைவையிலும் 'புரட்சி'

தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு முதலமைச்சர் கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, அக். 12—
"தமிழ்நாட்டில் முன்பு அரிசிப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்தது ; தமிழக அரசின் தீவிர நடவடிக்கையின் காரணமாகத் தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று -- இப்போது உபரி மாநிலமாகவும் திகழ்கிறது ; இன்றுள்ள பிரச்சினை, உபரி அரிசியைக் கெட்டுப் போகாமல் பாதுகாத்து வைப்பதுதான்.

"நெல்லை உலர வைக்கும்போதும் -- அரைக்கும்போதும் -- மூட்டையாகக் கட்டும்போதும் ஏராளமான அரிசி வீணுகிறது ; இந்தமாதிரி சேதம் ஆவதைத் தடுக்கும் வழி வகைகளைக் கருத்தரங்கில் விவாதிக்க வேண்டும்.

"நெல்லை உலரவைப்பதற்கும் -- அரைப்பதற்கும் அதிகச் செலவாகிறது ; குறைந்த செலவில் நிறைந்த பயன்பெறவும் வழிகாண வேண்டும்.

"நெல் உற்பத்தியில் 'பசுமைப் புரட்சி'யைக் கண்ட தமிழக அரசு, நெல்லை அரிசியாக மாற்றும் துறையிலும் 'புரட்சி'யைக் காண, நிபுணர்கட்கு எல்லா வகையிலும் உதவும்."

—கிண்டியில் நடந்த அரிசி அரைவைத் தொழில் நுட்பக் கருத்தரங்கில்

தமிழகத்தின் சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள்

ரூ. 26.5 கோடி உதவ உலக பாங்கி இசைவு

தஞ்சாவூர், அக். 12—
தமிழ்நாட்டில் சிறிய நீர்ப்பாசன வசதித் திட்டங்களின் மேம்பாட்டுக்கு 350 இலட்சம் டாலர் (சுமார் ரூ 26.50 கோடி) கடனுகை வழங்க உலக பாங்கி இசைந்திருக்கிறது.

நிலத்திற்கு அடியில் உள்ள தண்ணீர் பற்றிய ஆராய்ச்சிப் பிரிவின இயக்குநர் எஸ். பஞ்சநதம் இத்தகவலைக் கூறினர் ; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"இந்த உதவியுடன், குழாய்க் கிணறுகள் -- ஆழமான 'போர்' கிணறுகள் ஆகியவை பெரும் அளவில் தோண்டப்படும்."

"காவிரிப் பகுதியில் நிலத்திற்கு அடியில் உள்ள தண்ணீர் பற்றிய ஆராய்ச்சி முடிந்துவிட்டது ; இது காவிரி, வெண்ணுறு, பேரணைக்கால்வாய் என்ற மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

"இப்போது நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து காவிரிப் பகுதியில் 4,300 கோடி கன அடியும் -- பேரணைக் கால்வாய்ப் பகுதியில் 3,000 கோடி கன அடியும் -- வெண்ணுற்றுப் பகுதியில் 1,000 கோடி கன அடியும் தண்ணீர் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது."

வேளாண்மைப் பல்கலைக்கழகப் பாடத் திட்டம்

தற்காலத்திற்கேற்ப மாற்றியமைக்கப்படும்

தஞ்சாவூர், அக். 11—
"தமிழக வேளாண்மைப் பல்கலைக்கழகப் பாடத் திட்டம், அடுத்தக் கல்வி ஆண்டிலிருந்து அமெரிக்கப் பாணியில் முழுதும் மாற்றியமைக்கப்படும்"
என்று அதன் துணைவேந்தர் ஜி இரங்கசாமி இங்கு நிருபர்களிடம் கூறினர்.

தற்போதுள்ள பாடத் திட்டம் 30 ஆண்டுகளுக்கு முன் வகுக்கப்பட்டதென்றும், தற்காலத் தேவைக்கேற்ப அதை மாற்றியமைக்க வேண்டியிருக்கிறதென்றும் அவர் சொன்னர்.

புதிய பாடத் திட்டம் தயாராகி வருவதாயும், விதை, டெக்னலஜி, உணவு டெக்னலஜி போன்றவையும் அதில் இடம்பெறும் என்றும், புதிய ஆராய்ச்சி வசதிகளுக்கும் வகை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி.மு.க. ஆட்சிமன்றக் குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிமன்றக் குழுக் கூட்டம், 17–10–71 ஞாயிறு காலை 9-மணிக்கு சென்னை-அண்ணு சாலையில் உள்ள தி. மு. கழகச் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில், கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பொருள் :

பொள்ளாச்சி நாடாளுமன்ற இடைத் தேர்தல்

'அறிவகம்'
சென்னை-18
10–10–'71

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

பழம்பெரும் சுயமரியாதை இயக்க வீரர் தி. பொ. வேதாசலம் மறைவு

பெரியார் -- கலைஞர் -- என். வி. நடராசன் இரங்கல்

சென்னை, அக். 12 —
திராவிடர் கழக நிர்வாகக் குழுவின் தலைவராகப் பல்லாண்டுகள் இருந்து தந்தை பெரியார் அவர்களின் பேரன்பைப் பெற்றவரும், நீதிக் கட்சி -- சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்தவருமான திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்கள், தமது 74-வது வயதில் நேற்று திருச்சியில் உள்ள தமது இல்லத்தில் மாரடைப்பால் இயற்கையெய்தினர் என்ற செய்தியைத் துயரத்துடன் அறிவித்துக்கொள்கிறேம்.

பெரியார் -- அன்பில் இறுதி மரியாதை

செய்தியறிந்ததும் தந்தை பெரியார் அவர்களும், அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் தி பொ. வேதாசலம் அவர்களின் இல்லம் சென்று தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

சவ ஊர்வலம்

நேற்று மாலை நடந்த சவ ஊர்வலத்திலும், சவ அடக்க நிகழ்ச்சியிலும் ஏராளமான தி. க. — தி. மு. க. தோழர்களும், நகரப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

கலைஞர் இரங்கல்

திரு. வேதாசலம் மறைவு குறித்து கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளதாவது :—

"திரு. தி. பொ. வே. அவர்களது மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன் ; பழம்பெரும் தலைவரும், நீதிக்கட்சி-- சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தவரான திரு. வேதாசலம் அவர்கள், தமிழகத்திற்கு வழிகாட்டியாக விளங்கியவர் ; அமைதியும் பண்பும் நிறைந்தவர்.

"அவரது மறைவால் துயலுரும் தந்தை பெரியார் அவர்கட்கும், இயக்கத் தோழர்களுக்கும், மறைந்த அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

என். வி. நடராசன்

கழகத் துணைப் பொதுச்செயலாளர் திரு என். வி. நடராசன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது :—

"திராவிடர் கழகத்தின் முன்னாள் நிர்வாகத் தலைவரும் -- சுயமரியாதை இயக்கத்தின் முன்னேடிகளில் ஒருவரும்--தந்தை பெரியார் அவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களில் ஒருவராக விளங்கி வந்தவருமான திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்கள் மறைவு கேட்டு மிகவும் வருந்துகிறேன்.

"பொதுவாகத் தமிழர்களின் முன்னேற்றத்திற்கும் -- சிறப்பாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நல்வாழ்விற்காகவும் துவக்கக் காலந்தொட்டு அரும்பாடுபட்ட தலைவர்களில் அவரும் ஒருவராவார்.

"தந்தை பெரியார் அவர்கள் முன்பு திருச்சிக்குச் செல்லும் பொழுதெல்லாம் வழக்கறிஞர் வேதாசலம் அவர்கள் வீட்டில்தான் தங்கியிருப்பார்கள்.

"தமிழ் மக்கள் பல்வேறு துறைகளில் இன்று முன்னேற்றம் கண்டிருப்பதற்கு வழக்கறிஞர் வேதாசலம் அவர்களின் தொண்டும் ஒரு காரணம் ஆகும்.

"அவரது மறைவு நமக்கெல்லாம் பேரிழப்பாகும். அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

காவல்துறையினரின் கண்ணியமிக்க கடமை

சென்னை, அக். 12—

"ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டைவிட குற்றங்களைத் தடுப்பதில் நாம் முன்னேறியிருக்கிறோம்.

"கடந்த ஆண்டு கண்டுபிடித்த வழக்குகள் 70 சதவிகிதமாக இருந்தது; இந்த ஆண்டு 72 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

"புலனாய்வு செய்து உறுதி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 50 சதவிகிதத்திலிருந்து 52 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்ற செய்தி மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது என்று இன்ஸ்பெக்டர் தெரிவித்தார்.

"புதிதாக நாங்கள் அரசுப் பொறுப்பேற்றபோது -- கடந்த இருபதாண்டுக்காலமாக ஆட்சியிலிருந்தவர்கள் மாறி வேறு கட்சியினர் ஆட்சிக்கு வந்தபோது, -- 'நாட்டில் சட்டம் -- அமைதி -- ஒழுங்கு எப்படி இருக்குமோ' என்றெல்லாம் சந்தேகப்பட்டார்கள்; அப்படிப்பட்ட ஐயப்பாடு தோன்றுவது இயல்புதான்.

"நீண்டகாலமாக ஆட்சியிலிருந்தவர்கள் போய் புதிய ஆட்சி உதயமாகும்போது, எல்லோருக்கும் இப்படிப்பட்ட சந்தேகம் தோன்றும்; என்றாலும்கூட மிகைப்படுத்தி அதைப் பற்றிக் கூறினார்கள்.

"இயந்திரமாக இருக்கின்ற அரசின் நிர்வாகம்—எந்த அரசு மாறினாலும்--அந்த அரசுக்கேற்ப சுழலவேண்டும்; அந்த முறையைக் கடைபிடித்தால் எந்தவித ஒழுங்கீனமும் ஏற்படாது! அந்த முறையில் அரசு நிர்வாகம்—குறிப்பாக காவல்துறை நிர்வாகம் எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கிறது!

"'ஐயோ--அந்த ஆட்சி போய்விட்டதே' என்று இருந்தால், புதிய ஆட்சியினர் கொண்டுவரும் சட்டத்தை -- ஒழுங்கை -- அமைதியை நிலைநாட்டியிருக்க முடியாது!

"'நமக்கென்ன?' என்று மக்கள் இருந்துவிட்டால், குற்றம் அதிகமாகிவிடும் -- என்று அருள் அவர்கள் தெரிவித்தார்; 'நமக்கென்ன' என்றிருப்பது காவல் துறையினருக்கு மட்டும் பொருத்தமானதாகும்; எந்த ஆட்சி மாறினாலும், 'நமக்கென்ன; நாம் சட்டம் -- ஒழுங்கைக் கவனித்தால் போதும்' என்று காவல் துறையினர் இருக்கவேண்டும்.

"பழமொழியாக ஒன்றைச் சொல்வார்கள் -- 'இராமன் ஆண்டாலென்ன -- இராவணன் ஆண்டாலென்ன' என்று! காவல் துறையினர் அதுபோல், யார் ஆண்டாலென்ன--நம் கடமையை நாம் செய்யவேண்டும்' என்ற பொறுப்புடன், சட்டம்--ஒழுங்கை நிறைவேற்ற வேண்டும்.

"காவல்துறையினர் மாநாட்டிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும் நான் இதுபற்றி சொல்லியிருக்கிறேன்; 'நானே ஆணையிட்டாலும் சரியாக இல்லையென்றால், என்னைத் திருத்த முன்வாருங்கள்' என்று பகிரங்கமாகக் காவல்துறையினர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறேன்; அந்த அளவில் காவல்துறையினர் நேர்மையோடு பணியாற்ற வேண்டும்."

--முதலமைச்சர் மு. கருணாநிதி

(குற்றத் தடுப்பு வார விழாவில்)

புதிய பத்துக் காசு நாணயங்கள்

அக். 15-ல் வெளிவருகிறது

புதுடில்லி, அக். 12—

புதிய பத்துக் காசு நாணயங்கள் இத்தியக்கள் 15-ஆம் நாள் வெளியிடப்படும்.

அலுமினியம்--மக்னீசியம் ஆகியவற்றின் கலவையால் இந்த நாணயம் செய்யப்பட்டுள்ளது.

புதிய 10 காசு நாணயம் வெண்மை நிறத்தில் இருக்கும்; இப்போது உள்ள 10 காசு நாணயத்தைவிட எடை குறைந்ததாக -- ஆனால் அளவில் சற்றுப் பெரிதாக இருக்கும்.

இந்த நாணயத்தின் ஒருபுறத்தில், அசோகத் தூண் உள்ள சிங்க முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும்.

நாணயத்தின் இருபுறங்களிலும், 'பாரத்' என்று இந்தியிலும், 'இந்தியா' என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும்.

புதிய 10 காசு நாணயம் வெளியிடப்பட்டபோதிலும், இப்போது புழக்கத்தில் உள்ள பழைய 10 காசு நாணயமும் தொடர்ந்து செல்லுபடியாகும்.

புதிய நாணயம், ரிசர்வ் பாங்கியின் எல்லா வெளியீட்டு அலுவலகங்களிலும் அக். 15-ம் நாள் வெளியிடப்படும்; அதன் பிறகு, எல்லாக் கிளை பாங்கிகளிலும், அரசுக் கருவூலம் -- துணைக் கருவூலங்களிலும் கிடைக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

தாயகம் திரும்பும் இலங்கை --- பர்மா மக்களுக்கு மறுவாழ்வு

அந்தமானில் குடியமர்த்தும் திட்டம் பரிசீலனை

அமைச்சர் சத்தியவாணிமுத்து அந்தமான் செல்கிறார்

சென்னை, அக். 12—

இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பும் அகதிகளைக் குடியமர்த்தி மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களைப் பரிசீலிப்பதற்காகத் தமிழக அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், இம்மாத இறுதியில் அந்தமான், நிக்கோபார் செல்கிறார்; அவருடன் குடிபெயர்ந்தோர் மறுவாழ்வுத்துறை இயக்குநர் பி. வி. வெங்கடகிருஷ்ணனும் உடன் செல்வார்.

இப்போதையத் திட்டப்படி அவர்கள் இம்மாதம் 31-ந் தேதி யன்று சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் பயணமாவார்கள்; அங்கிருந்து அந்தமான் செல்கிறார்கள்.

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் அவர்கள் ஒரு வார காலம் தங்கியிருப்பார்கள்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர், அங்கு தேயிலை--ரப்பர் தோட்டங்களில் வேலை செய்தவர்கள்; அவர்களுக்கு இந்தத் தீவுகளில் தேயிலை--ரப்பர் தோட்டங்கள் அமைத்துக் கொடுத்து மறுவாழ்வு அளிக்கும் திட்டம் குறித்து பரிசீலிப்பதற்காக அந்தமான் செல்வதாக அமைச்சர் சொன்னார்.

இலங்கையிலிருந்து ஓரிரு மாதங்களில் பெரும் அளவில இந்தியர்கள் தாயகம் திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அவர்களை வரவேற்று மறுவாழ்வு அளிக்கும் தயார் நிலையில் இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

ஐந்தே ஆண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கலாம்

தட்டுப்பாடின்றி உருக்கு--சம அளவில் மூலப் பொருள் எல்லாத் தொழில்களுக்கும் கிட்டவேண்டும்

தொழில் அமைச்சர் செ. மாதவன் கூறும் அரிய யோசனை

கோவை, அக். 11—

"சர்வதேச நாடுகளுடன் வர்த்தகத்தில் இந்தியா போட்டியிட வேண்டுமென்றால், வளர்ச்சியடைந்துள்ள இதர நாடுகளிடமிருந்து நாம் தொழில் நுட்ப வல்லுநர்களை வரவழைத்துக்கொள்ள வேண்டும்; அதே நேரத்தில், நமது நாட்டிலேயே உள்ள தொழில் நுட்ப வல்லுநர்களையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்"

என்று தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள் வலியுறுத்திக் கூறினர்.

கோவை சிறு தொழிலதிபர்கள் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"**வெளிநாடுகளிடமிருந்து தொழில் நுட்ப வல்லுநர்களைத் தருவிப்பதற்காக ஜப்பான் பெருமளவுக்குப் பணத்தைச் செலவழித்தது.**

தொழில் நுட்ப வல்லுநர்களை எந்த நாட்டிலிருந்து வரவழைத்துக்கொண்டு விவரங்களை கற்றுக்கொண்டதோ அந்நாட்டுடனேயே போட்டியிடக்கூடிய வகையில் ஜப்பான் இப்போது தொழில் திறன் பெற்றதாக விளங்குகிறது.

தொழில் துறைகள் தனிப்பட்ட முறையில் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபட முடியாது; கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொழில் நுட்ப விவரங்களும்--தொழில் நுட்ப வல்லுநர்களும் தொழில்களுக்குக் கிடைக்கும்படி செய்வதற்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள தொழில்களுக்கு வேண்டிய உருக்குத் தேவைகள் முழுவதுமாககிடைக்கச் செய்தால் அடுத்த 5 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் பெரும் அளவுக்குத் தொழில் வளர்ச்சியடைந்து--மாநிலத்தில் வேலையில்லாத நிலைமையை ஒழித்துக்கட்ட முடியும்.

கச்சாப் பொருள்களை சம அளவில் விநியோகிப்பதற்கான பொறுப்பை மத்திய அரசு ஏற்க வேண்டும்; இந்த பிரச்சினையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில மேம்பாடு அடைந்து வருகிறது; கடந்த 4 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட புதிய தொழில்களின் எண்ணிக்கை 11,000-த்திலிருந்து 21,000 ஆக உயர்ந்திருக்கிறது; இந்த எண்ணிக்கையை 10 மடங்காக உயர்த்த வேண்டும் என்று அரசு விரும்புகிறது."

நீண்ட கால பரிகார நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

'தென்னாட்டில் துணித் தொழில்' என்ற கருத்தரங்கை அமைசசர் செ. மாதவன் இங்கு தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"துணித் தொழில் நல்ல முறையில இருக்கும்படி செய்வதற்கு அரசு--தொழிலதிபர்கள்--தொழிலாளர்கள் இணைந்த முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

துணித் தொழிலில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி, அண்மைக் காலத்தில் தோன்றியதல்ல; நீண்ட காலமாகவே இருந்துவருகிறது.

இத்தொழில் நிலையாக இயங்கச் செய்வதற்கு நீண்டகாலப் பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

தீவிர பருத்திச் சாகுபடி

கோவை, திருநெல்வேலி மாவட்டங்களில் தீவிர பருத்திச் சாகுபடிக்காக மத்திய அரசு உதவியுடன் தமிழ்நாடு அரசு பல திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது; இவற்றிற்கு மொத்தச் செலவு ரூ 66 இலட்சமாகும்.

உறுதிமொழிப்படி மத்திய அரசு நிதியுதவி தரவில்லை

கோவை, அக். 11—

"**கோவை மாவட்டத்தில் மூடப்பட்டிருக்கும் மற்ற ஆலைகளைத் திறப்பது தொடர்பாக மத்திய அரசின் முடிவை தமிழ்நாடு அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது**"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன், இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"மூடியிருக்கும் ஆலைகளை மீண்டும துவங்குவதற்குப் போதுமான நிதி தரவேண்டும் என்று புதுடில்லியில் அக். 12-ந் தேதி நடைபெறவிருக்கும்முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு அரசு கோரும்.

தமிழ்நாடு துணிக் கார்ப்பரேஷன் ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் (நட்டத்தில் நடந்துகொண்டிருந்த) ஐந்து ஆலைகளுக்காக ஏறக்குறைய ரூ 98 இலட்சம் செலவிட்டுள்ளோம்; ஆனால் செலவில 51 சதவிகிதத்தை ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்த மத்திய அரசு தன் பங்கைக் கொடுக்கவில்லை.

நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த ஆலைகளில் இயந்திரங்களைப் புதுப்பிக்கத் தமிழக அரசு கிட்டத்தட்ட ரூ 45 இலட்சம் செலவிட்டுள்ளது; ஆனால், மத்திய அரசு ரூ 2 இலட்சம்தான் அளித்துள்ளது.

தொழிலாளர் சங்கங்கள் முறையிட்டுக் கொண்டதன்பேரில, மூடப்பட்டிருக்கும் பாக்கி ஆலைகளில், நீதிமன்றத்தில் விசாரணைக்காக இருப்பவை தவிர, மற்ற ஆலைகளை மீண்டும் தொடங்குவதற்கான பிரேரணைகளை மத்திய அரசிடம் அளித்துள்ளோம்; மத்திய அரசின் முடிவுக்காகக் காத்திருக்கிறோம்."

வருமானவரி வசூல் அதிகாரம்

மாநில அரசுக்கு வர வேண்டும்

கோயமுத்தூர், அக். 11—

"வருமான வரி வசூல் அதிகாரம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பஞ்சாலைத் தொழில் பற்றிய கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் வலியுறுத்திக் கூறினர்; அரசின வரிக் கொள்கையை அவர் கண்டித்தார்; அவர் மேலும் கூறியதாவது;—

"**தனி நபர் சேமித்து முதலீடு செய்ய ஊக்கமளிக்காத வகையில் கம்பெனித் துறை மீதும்--தனி நபர்மீதும் மத்திய அரசின் வரி விதிப்புக் கொள்கை இருக்கிறது.**

புதிய தொழில்களில் முதலீடு செய்யவும், தொழில்களை விரிவுபடுத்தவும் தொழில் அதிபர்களுக்கு மத்திய அரசின் கடும் வரி விதிப்பு ஊக்கத்தைக் கெடுப்பதாக இருக்கிறது.

நெருக்கடிமேல் நெருக்கடி ஏற்பட்டுவரும் பஞ்சாலைத் தொழிலுக்கு, 'எக்சைஸ்' தீர்வையிலிருந்து நிவாரணம் அளிக்க மத்திய அரசு தயங்குவது, வியப்புத் தருவதாக இருக்கிறது."

தெ. ஆ. மாவட்டத்தில் உருக்காலை -- ஜப்பான் நிபுணர்க் குழு வருகை

கோயமுத்தூர், அக். 10—

தென் ஆற்காடு மாவட்டத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் தொடங்கும் சாத்தியக் கூறுகளை ஆராய விரைவில் சென்னைக்கு ஜப்பானியத் தொழிலதிபர்கள் குழுவாக வரும்.

கோயமுத்தூர் இரும்பு வியாபாரிகள் சங்கங்கள் அளித்த வரவேற்பின்போது தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் இதனைத் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"ஜப்பானுக்கு இரும்புக் கனியை இந்தியா ஏற்றுமதி செய்யும் போது அதை உருக்காக மாற்றி ஜப்பான் நமக்கு விற்பது முரண்பட்டதாகும்.

உருக்குப் பற்றாக்குறையின் காரணமாகத்தான கிராமப் பகுதிகளில் மின்சார வசதி அளிப்பதில் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது.

அதைப்போல், அரக்கோணத்தில் உருக்குப் பாள ஆலைக் கட்டடம் கட்டுவதில் இரும்பு உருக்குப் பெற தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

பிரச்சினைகளை மத்திய அரசு சரியாகக் கவனிக்காததே இந்தக் காலதாமதங்களுக்குக் காரணமாகும்."